முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1674

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**29.04.2024,** திங்கட்கிழமை

1. தவராஜனே அரங்கா வாழ்க
தர்மலோகம் படைக்க உலகோர்க்கு
அவதாரம் எடுத்து என் அம்சமாக
அகிலத்தில் அறம் வளர்க்கும் குருராஜனே வாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
வழங்குவேன் அரங்கன் உமக்கு ஞான அறிவுரை ஆசி
(குரோதி வருடம் சித்திரை மாதம் 16 ம் நாள், 29.04.2024, திங்கட்கிழமை)
தாழ்விலா அரங்கன் ஞானம் உலகமெங்கும் பரவ
தரணியில் தர்மபலமும் கூடி இனிதே
3. அவதார ஞானி அரங்கன் உன்வழி
அகிலத்தில் அளவிலா ஞானியர் படைகள் பெருகி
வரமென கலியுகத்தில் அரங்கன் உன் ஆசியாலே
வையகத்தாரெல்லாம் ஞானிகளாகவும்
4. உலக மாற்றம் நிகழ்த்தும் ஞானப்படைகளாகவும் மாறி
இனிமைபட அரங்கன் உன்
கருணையாலும் தர்மத்தாலும் எங்கும்
தர்மசாலைகள் அளவில்லா பெருகி
5. பெருகியே இந்த பேருலகம் தர்மலோகமாகும்
பிரணவ சக்திமிகு அரங்கன் ஆசியாலே
சரவணச்சுடர் வழி உலகமெல்லாம் ஆறுமுகன் என் வழிபாடு பெருகி
சக்தி கூடிட சடுதி உலகுக்கு
6. ஞான ஆட்சிக் காலமும்
ஞானியர்கள் வெளிப்படும் உன்னதமான
ஞானசித்தர் காலமும் உருவாகி இனிதே
ஞான யுகமாற்றம் நடக்கும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–